**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்</u>**
**<u>அசல் வழக்கு எண். 49/2020</u>**

இந்நீதிமன்ற எழுத்தர் திரு. மோகன், Bench Clerk என்பவரால் முறையோடு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் 1 ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875 ம் ஆண்டின் 10 வது சட்டத்தின் வரையறைகளுக்கு உட்பட்டு 2023 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்.ராதாகிருஷ்ணன் (DW1)<br>வயது. | நாள்.25.04.2023 |
| த/பெ. வீரராகவலு | தொழில் |
| கிராமம் | வட்டம், |

<u>பி. வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் 3 முதல் 6 வரையானவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>

**1.** பிரதிவாதிகள் முத்துக்கிருஷ்ணன் மற்றும் தனசேகர் ஆகியோரை எனக்கு தெரியும். பிரதிவாதிகள் பிரபாகர் மற்றும் ராஜசேகர் ஆகியோரையும் எனக்கு தெரியும்.

**2.** வாதிகள் பாலகிருஷ்ணன் என்பவரின் வாரிசுகள் என்றால் சரிதான். எனது நிரந்தர குடியிருப்பு கீழச்சேரி என்றால் சரிதான். தற்போது 3 வருடங்களாக நான் செய்யூரில் வசித்து வருகிறேன். வழக்கிற்காக செய்யூரில் வசித்து வருகிறேன்.

**3.** தாவா சர்வே எண்ணில் 128/5 ல் 3 ஏக்கர் எனக்கு கிழக்கு பக்கத்தில் 2 ஏக்கர் 36 செண்ட் எனக்கு சொந்தமானது என்றால் சரிதான். அதில் நானும் எனது தம்பியும் சேர்ந்து 1 ஏக்கர் 18 செண்ட் என்று பாகம் பிரித்துகொண்டோம் என்றால் சரிதான். அதை பத்திரமாக எழுதி 1980 ம் வருடம் பதிவு செய்தோம் என்றால் சரிதான்.

**4.** அந்த 2 ஏக்கர் 36 செண்டில் எனக்கு மேற்கு பக்கமாகவும், எனது தம்பிக்கு கிழக்கு பக்கமாகவும் பிரித்துகொண்டோம் என்றால் சரிதான்.

**5.** தாவா சர்வே நம்பரில் எங்களது நிலம் போக மீதி 24 செண்டை யார் அனுபவித்து வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

எனது பிரமாண வாக்குமூலத்திலும், எனது பதிலுரையிலும் மேற்படி 24 செண்டை கோவிந்தராஜ் என்பவர் தான் அனுபவித்து வந்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு தற்போது 84 வயதாகிறது. எனது சிறுவயதிலிருந்தே மேற்சொன்ன நிலத்தை கோவிந்தராஜ் அனுபவித்து வந்தார் என்ற விவரம் எனக்கு நன்கு தெரியும். அந்த நிலத்தில் அவரை தவிர வேறு யாரும் பயிர் வைத்தது கிடையாது என்றால் சரிதான்.

**6.** சாமி கவுண்டரின் பிள்ளைகளிடையே ஒரு காலத்திலும் தாவா சர்வே எண்ணில் உள்ள 24 செண்டில் கோவிந்தராஜின் அனுபவம் குறித்து எந்த வித தகராறும் செய்தது கிடையாது என்றால் சரிதான். மேற்படி 24 செண்டை தவிர சாமிகவுண்டருக்கு ஊரில் வேறு நிலங்களும் உள்ளது என்றால் சரிதான். அந்த நிலங்கள் மற்றும் தாவா சர்வே எண்ணில் உள்ள 24 செண்டையும் சாமி கவுண்டரின் பிள்ளைகள் தனித்தனியாக பல காலமாக அனுபவித்து வந்ததால் எனக்கும் ஊரில் உள்ளவர்களுக்கும் பாகப்பிரிவினை ஆகிவிட்டது என்று நினைத்தோம் என்றால் சரிதான்.

**7.** 3 மற்றும் 4 பிரதிவாதிகள் கோவிந்தராஜின் வாரிசுதாரர்கள் என்பதால் கோவிந்தராஜ் இறப்பிற்கு பின்பு 5 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு மேற்படி 24 செண்டை 14.08.2022 ல் கிரையம் செய்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

**8.** அந்த 24 செண்டு என்னுடைய நிலத்திற்கு மேற்கில் உள்ளதால் அவர்களின் கிரய பத்திரத்தில் கூட ஜக்குபந்தியில் என்னுடைய (ராதாகிருஷ்ணன்) நிலத்திற்கு மேற்கில் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**9**. 6 ம் பிரதிவாதி தனக்கு சொந்தமான 135/2 ஏ என்ற சர்வே நம்பரில் உள்ள கிணற்றிலிருந்து தான் 3 மற்றும் 4 பிரதிவாதிகளிடமிருந்த வாங்கிய தாவா சர்வே நம்பரில் உள்ள 24 செண்டிற்கு மண்ணுக்கு அடியில் பைப்பை புதைத்து அதன் வழியாக தண்ணீர் எடுத்து வந்து விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

**10.** வாதியின் தகப்பனார் பாலகிருஷ்ணன் ஒரு காலத்திலும் கோவிந்தராஜின் அனுபவத்தையோ, அல்லது அவர்களின் பிள்ளைகளின்

அனுபவத்தையோ தடை செய்துள்ளாரா என்றால் இல்லை.

**11**. இறந்துபோன கோவிந்தராஜிக்கு மனைவி தனலட்சுமி மகள்கள் மலர்விழி மற்றும் ராதா, மகன்கள் ராஜசேகர் மற்றும் பிரபாகர் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான்.

**12**. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் எங்களை தவிர 3 முதல் 6 பிரதிவாதிகள் மட்டுமே இந்த வழக்கில் தரப்பினர்கள் என்றால் சரிதான். தற்போதும் 5 மற்றும் 6 பிரதிவாதிகள் தான் மேற்படி 24 செண்டில் பயிர் வைத்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

**13**. என்னுடைய நிலத்தையும், 5 மற்றும் 6 பிரதிவாதிகள் நிலத்தையும் தனியாக பிரித்து காட்டுவதற்கு வரப்பு உள்ளது என்றால் சரிதான். அந்த வரப்பு நீண்ட காலமாகவே உள்ளது. எனது தந்தை காலத்திலிருந்தே உள்ளது.

**14**. தாவா சர்வே எண்ணில் 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் சொத்து தனியாகவும், மற்ற பிரதிவாதிகளின் சொத்து தனியாகவும் உள்ளது என்றால் சரிதான். சாமி கவுண்டரின் மூத்த மகன் என்பதால் பாலகிருஷ்ணன் பெயரில் தாவா சொத்து சர்வே எண்ணிற்கு எங்கள் தகப்பானாருடன் சேர்த்து கூட்டுப்பட்டா தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் பாலகிருஷ்ணன் ஒரு காலத்திலும் தாவா சொத்தில் உள்ள 24 செண்டில் பயிர் வைத்தது கிடையாது என்றால் சரிதான்.

**15**. எனவே, பாலகிருஷ்ணனுடன் சேர்த்து 920 என்ற கூட்டுப்பட்டா வந்ததால் பாலகிருஷ்ணன் இறப்பிற்கு பின் அவரது மகன் சங்கர் மற்ற வாதிகளை தூண்டிவிட்டு இந்த வழக்கை எங்கள் மீது தவறுதலாக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

**16**. பாலகிருஷ்ணன் மனைவி இங்கு வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். சாமி கவுண்டருக்கு நாராயணசாமி, சுப்புராயன், பாலகிருஷ்ணன், பெருமாள்,, கோவிந்தராஜ் ஆகிய 5 நபர்கள் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன 5 நபர்களும் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். மேற்சொன்ன 5 நபர்களின் வாரிசுதாரர்களின் கோவிந்தராஜ், சுப்புராயன் ஆகிய வாரிசுதாரர்களை தவிர்த்து மற்ற நபர்களின் வாரிசுதாரர்களை இவ்வழக்கில்

தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

**17**. இவ்வழக்கு தாவா சொத்து 24 செண்டில் 4 ம் வாதி, 5 மற்றும் 6 பிரதிவாதிகளிடமிருந்து பணத்தை பறிக்கும் நோக்கத்திலும் மேற்படி 24 செண்டிற்கு சம்மந்தம் இல்லாத 1 மற்றும் 2 பிரதிவாதிகளை தேவையில்லாமல் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து, வயதான என்னையும், எனது சகோதரரையும் அலைக்கழிக்கும் நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

**18**. எனவே, இந்த மேற்படி வழக்கு அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரிதான்.

**(மறு விசாரணை இல்லை)**

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- Tmt. N. Preethi.,
DM Cum JM
Cheyyur